**செய்தி வெளியீடு எண்:617** **நாள்: 23.12.2016**

பொது விநியோகத் திட்ட செயல்பாடுகள் குறித்த ஆலோசனைக்கூட்டம் இன்று (23.12.2016) மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. இரா.காமராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் 3 மாத தேவைக்குரிய அரிசி உள்ளிட்ட உணவு பொருட்கள் கையிருப்பில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டது. புதிய குடும்ப அட்டை Smart Card வழங்குவதில் உள்ள முன்னேற்றம் குறித்து பரிசீலனை செய்யப்பட்டது. அதில் தற்பொழுது முழுமையாக ஆதார் பதிவு செய்யப்பட்ட குடும்ப அட்டைகள் 91 லட்சத்து 38 ஆயிரம் ஆகும். ஒரு நபர் ஆதார் பதிவு செய்யப்பட்ட குடும்ப அட்டைகள் 87 லட்சத்து 78 ஆயிரம் ஆகும். ஆதார் பதிவு செய்யாமல் அலைபேசி எண் மட்டும் தெரிவித்தவர்கள் 6 லட்சத்து 78 ஆயிரம் ஆகும். விடுபட்ட குடும்ப அட்டைகளின் ஆதார் மற்றும் அலைபேசி விவரங்கள் தொடர்பாக 15.12.2016 முதல் தல ஆய்வு நடைபெற்று வருகிறது. இப்பணி முழுமையாக முடிந்தவுடன் புதிய Smart Card வழங்கப்படும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மைச் செயலாளர் திரு.பிரதீப் யாதவ், இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் / முதன்மைச் செயலாளர் Dr.கே.கோபால், இ.ஆ.ப., மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**